லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்
(MAIN)
34, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
★ I.C.M.A. ★ I.A.A.
★ A.C.C.A.
★ Chartered Prelim
(தனி பாடங்களும்)
விபரங்களுக்கு :
நேரில் / தபாலில்

பக்கங்கள் 8 ★

ஈழநாடு The EELANAADU (50 சதம்)

மலர் 22 பங்குனி 27 [illegible] 22 இதழ் 59
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-4-80

## கொமெய்னி மகிழ்ச்சி

(தெஹ்ரான்)
ஈரான் மீது அமெரிக்கா கொண்டுவந்துள்ள புதிய நடவடிக்கைகளை ஈரானிய மதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளார்.

''ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்களிடமிருந்து ஈரான் விடுதலை பெறுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று அவர் நேற்று தெரிவித்தார்.

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1980-4-9
PERIODICALS DIVISION

# மத்தியூ மீதான குற்றச்சாட்டு:

# விசாரணை நடத்த தெரிவுக் குழு நியமனம்!

(நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம்)

**கைத்தொழில்,விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு.சிறில்மத்தியூவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்யும் பொருட்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நேற்று நியமிக்கப்பட்டது. இத்தெரிவுக் குழு விரைவில் விசாரணைகளை நடத்தி; அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.**

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தலைவராகக் கடமையாற்றுவார். இத்தெரிவுக்குழு பற்றிய விபரத்தை சபாநாயகர் ஜனுப் பாக்கிர் மாக்கார் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

### 'அமிர்' பிரேரணை

அமைச்சர் திரு. சிறில் மத்தியூவுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்று எதிர்க் கட்சித்தலைவர் திரு. அ.அமிர்தலிங்கம் கடந்த மாதம் 21ம் திகதி பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்று தாக்கல் செய்திருந்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்பிரேரணையை வழிமொழிந்திருந்தார். இந்தப் பிரேரணையில்தமிழர்விடுதலைக் கூட்டணி, சுதந்திரக்கட்சி எம். பி.க்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

### பிரதமர் கருத்து

இப்பிரேரணை பற்றி அப்பொழுது பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா சபையில் அறிக்கை வெளியிடுகையில் குறிப்பிட்ட பிரேரணை குறித்து அரசாங்கத் தரப்பினருக்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாதென்று குறிப்பிட்டார்.

### சபாநாயகர் அறிவிப்பு

அமைச்சர் மத்தியூ மீது விசாரணை நடத்தும் பாராளுமன்றத் தெரிவுக்குழு பற்றிய விபரங்களை சபாநாயகர் நேற்று பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

அமைச்சர் திரு. லலித் அதுலத் முதலி தலைமை வகிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. அநுரா பண்டாரநாயக்கா, திரு. ஹரேந்திர கொரியா, திரு. மேர்வின் குலரத்தின, திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றார்கள் என்று சபாநாயகர் அறிவித்தார்.

இத்தெரிவுக்குழு விரைவில் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும். (ம)

## ரயில்சேவை நேரமாற்றம் தபால்சேவை சீர்குலைவு!

(யாழ்ப்பாணம்)
கொழும்பு-காங்கேசன்துறை இரவு தபால் ரயில் சேவையில் புதிய நேரமாற்றத்தினால் தபால் சேவை சீர்குலைந்துள்ளதுடன், பிரயாணிகளுக்கும் பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளது!

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப்புறப்படும் இரவு தபால் ரயில், தினமும் தாமதமாகவே யாழ்ப்பாணம் வந்துசேருகிறது. இவ்விதமான தாமத ரயில் சேவையினால், தபால் சேவையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சில நாட்களில் பல பகுதிகளில்வெளியூர்த்தபால் விநியோகமும் நடைபெறுவதில்லை. இந்த நாட்களில் யாழ். மாவட்ட தபால்கள் மட்டுமே விநியோகிக்கப்படுகின்றன. குறுகியகால முன்னறிவித்தலில் வெளியூர்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் கூட பரீட்சைக்குத் தோற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது!

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கு இரவு 8-30க்கு புறப்படும் இரவு தபால் ரயில் அடுத்த நாட்காலை 5-33க்கு யாழ்ப்பாணம் வந்துசேர வேண்டும். ஆனால், இரவு தபால் ரயில் சேவையின் புதிய நேரத்திற்கிணங்க நேற்றுவரை குறிப்பிட்ட நேரத்திற்கு ரயில் யாழ்ப்பாணம் வந்துசேரவில்லை. இரவு 8-30க்கு கொழும்பிலிருந்து புறப்படும் ரயில் வண்டி, இம்மாதம்முதலாம் திகதி முதல் நேற்றுவரை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த (காலை) நேர விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 1-ம் திகதி | 9-15 |
| 2-ம் திகதி | 7-52 |
| 3-ம் திகதி | 7 35 |
| 4-ம் திகதி | 8-35 |
| 5-ம் திகதி | 7-29 |
| 6-ம் திகதி | 6-34 |
| 7-ம் திகதி | 7-29 |
| 8-ம் திகதி | 11-53 |

# ஜெகஜீவன்ராம் கட்சிமாறினர்!

(புதுடில்லி)
முன்னாள் துணைப்பிரதமரும் முதிர்ந்த அரசியல்வாதியுமான திரு. ஜெகஜீவன்ராம் நேற்றுகாங்கிரஸ்அர்ஸ்(காங்கிரஸ்யு) கட்சியில் சேர்ந்து கொண்டார்.

திரு ஜெகஜீவன்ராமை வரவேற்றுப்பேசிய 'காங்கிரஸ்யு' கட்சித் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ்; தமது கட்சியில் ஜெகஜீவன்ராம் சேர்ந்து கொண்டதன் மூலம் எதிர்வரும் சட்டசபைத் தேர்தல்களில் தமது கட்சிக்கும் தமது கட்சியுடன் இணையும் தோழமைக் கட்சிகளுக்கும் நல்ல வெற்றிவாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது 73வது பிறந்த தினத்தை குதூகலமாகக் கொண்டாடிய திரு. ஜெகஜீவன்ராம் அன்று ஆதரவாளர்கள்மத்தியில்உரையாற்றுகையில்; தாம் எந்தக் கட்சியிலும் சேரப்போவதில்லை என்றும், இன்றைய அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டிப்பதற்கு சகலகட்சிகளும் ஒத்துழைக்கவேண்டுமென்று கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரது மேற்படி கருத்து செய்திப்பத்திரிகைகளில் வெளிவந்த இரண்டுதினங்களுக்குள்ளாகவே அரசியலில் குத்துக்கரணமடித்து 'காங்கிரஸ்-யு' கட்சியில் சேர்ந்துவிட்டார்!

வெங்காய விதை
இறக்குமதி செய்யப்பட்ட பூசா ரெட்ரக வெங்காய விதைகள் இன்றுமுதல் கிடைக்கும்
உங்கள் தேவைக்கு!
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5386

# விஜயசிறி குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை!

## பிரதமர்அறிக்கை சமர்ப்பித்தார்

(கொழும்பு)
கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம் மீதும், இக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு எதிராகவும் ஹரிஸ்பத்துவ இரண்டாவது எம். பி. திரு. ஆர். பி. விஜயசிறி சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்த ஆலோசனைக்குழு; குற்றச்சாட்டுக்கள் எதுவும் போதுமான ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை என்று கூறி, நிராகரித்துவிட்ட அதே நேரத்தில், மேற்படி விஷயமாக திரு விஜயசிறி, பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப அவரிடம் போதுமான ஆதாரங்கள்-விஷயங்கள் இருந்தன என்று கருத்து வெளியிட்டுள்ளது.

திரு. விஜயசிறியின் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழு விசாரணை நடத்தியது. பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழுவில், திருவாளர்கள் இம்புலான, எச் பி அபயரத்ன, ஹரிஸ் வனிகசேகரா, பிரேமரத்ன, வி. தர்மலிங்கம், மைத்திரிபால சேனநாயக்கா, ஜனுப் பஹ்ரூ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர் ஆலோசனைக்குழுவின் அறிக்கையை பிரதமர் நேற்று சபையில் சமர்ப்பித்துப் பேசினர்.

''நான்குதினங்களாக நடைபெற்ற விசாரணைகளின் போது, அமைச்சு செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம்,மகாவலி அபிவிருத்திச்சபை செயலாளர் திரு. ரி. சிவஞானம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். சாட்சிகளை திரு. விஜயசிறியும் உடனிருந்து குறுக்குவிசாரணை செய்திருந்தார். சிங்கப்பூரிலுள்ள இரண்டு கம்பெனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் அரிந்தமரம், உருக்கு, சீமெந்து ஆகியவை இறக்குமதி தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் நலன்களுக்கு எதிராக, கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அஜந்தா விஜயசேன செயல்படவில்லை என்பதையும் அவர் நாட்டின் பொருளாதார நலன்களுக்கு எவ்விதத்திலும் தீங்கு விளைவிக்கவில்லை என்பதையும் குழுகண்டறிந்ததுடன், இவர் மீதான எந்தக் குற்றச்சாட்டுமே நிரூபிக்கப்படவில்லை. ஆனால்; மேற்படி விஷயமாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப திரு. விஜய சிறியிடம் போதிய விஷயங்கள் இருந்தன என்று ஆலோசனைக்குழு அபிப்பிராயப்படுகிறது. அதேநேரத்தில் கட்டிடக் கூட்டுத்தாபனத் தலைவரின் சாட்சியத்திலிருந்து, கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய சில உத்தி

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை நகர் அபிவிருத்தி: பிரதமரை தூதுக்குழு சந்திக்கும்

[உடுப்பிட்டி]
வல்வை நகரைப் புதிய நகராக்குவதற்கான அபிவிருத்தித் திட்டங்கள் அடங்கிய மகஜர் ஒன்றுடன் வல்வை நகராளுமன்றத் தூதுகோஷ்டி ஒன்று பிரதமரைப் பேட்டி காணவுள்ளது.

வல்வை நகராளுமன்றத் தலைவர் திரு எஸ். ஞானமூர்த்தி தலைமையில் செல்லும் இத்தூதுக்குழு பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸாவை அடுத்த வாரம் நேரடியாகச் சந்தித்து வல்வெட்டித்துறை அபிவிருத்திபற்றிப் பேச்சுவார்த்தைகளை நடாத்தும். [அ]

## உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை

(அரியாலை)

சுன்னாகம் கிறிஸ்த சேவா ஆச்சிரமத்தின் ஆதரவில் யாழ் திறந்த வெளியரங்கில் உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை நடாத்தப் பட்டது.

இப் பஜனையில் அருட். திரு. யே. சர்வானந்தம் அடிகளார் அருளுரை நிகழ்த்திஞர். (கு)

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், இல: 11, இராமையா செட்டியார் ஒழுங்கை சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட் விடயமாக.

வழ: இல. நாஞ /197 மற்றும் கம்பனிகள் சட்டத்தின் (1956ல் மீளுரைக்கப்பட்ட இலங்கைச் சட்ட மன்றம் இயற்றிய சட்டத் தொகுப்பின் அத்தியாயம் 145) 162ஆம் பிரிவின் கீழும் அதன் வாசகங்களுக்கு அமையவும் நீதிமன்றத்திஞல் கலைக்கப்படுவதற்கான விண்ணப்பம் விடயமாக.

கதிரவேலு பேரம்பலம், இல. 68/2 ஐந்தாம் ஒழுங்கை, பிறவுண் ரேட், யாழ்ப்பாணம். மனுதார்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்திஞல் மேற்கூறிய நிறுவனத்தைக் கலைக்குமாறு கோரி, யாழ்ப்பாணம் பிரவுண் வீதி, இல. 68/2 ஐந்தாம் ஒழுங்கையில் உள்ள கதிரவேலு பேரம்பலம் என்பவர் குறித்த நீதிமன்றத்தில் 1980ஆம் வருடம் பங்குனி மாதம் 12ஆம் திகதி மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளார் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. மற்றும் குறித்த மனு 1980ஆம் வருடம் சித்திரை மாதம் 25-ம் திகதி மன்றில் ஆதரிக்கப்படும் என பணிக்கப்பட்டுள்ளது. மற்றும் குறித்த மனு சம்பந்தமாக கட்டளை வழங்குகையில் அதனை ஆதரிப்பதற்காக அல்லது எதிர்ப்பதற்காக அக்கறை உள்ள குறித்த நிறுவனத்தின் எவரேனும் கடஞளர் அல்லது பங்குக் கடப்பாட்டாளர் அந்நோக்கத்திற்காக நேரடியாக அல்லது தனது சட்டத்தரணி மூலம், அல்லது பதிவு பெற்ற தரணி மூலம் மனு விசாரணைக்கு எடுக்கப்படும் நேரத்தில் சமுகமளிக்கலாம். மற்றும் குறித்த மனுவின் பிரதி ஒன்றினைக் கோரும் குறித்த நிறுவனத்தின் கடஞளர் அல்லது பங்குக் கடப்பாட்டாளர் எவரேனும் இதன் கீழ்க் கையொப்பம் வைத்திருப்பவரிடம் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட செலவினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

சோ. லோகேஸ்வரன்
மனுதாரின் சட்டத்தரணி.

இல. 16, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- குறித்த மனு விசாரணைக்கு எடுக்கப்படும் நேரத்தில் தோன்ற விரும்பும் நபர் எவரேனும் மேற் கூறிய சோ. லோகேஸ்வரன் சட்டத்தரணிக்கு தனது குறித்த கருத்தினை வெளிப்படுத்தி எழுத்திலான அறிவித்தலாக நேரடியாகவோ, அல்லது தபால் மூலமாகவோ சேவிக்க வேண்டும். நபரின் பெயரையும், விலாசத்தையும் அல்லது நிறுவனமாயின் அந் நிறுவனத்தின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிட்டு, குறித்த நபர் அல்லது நிறுவனம் அல்லது அவரின் அல்லது அதன் பதிவு பெற்ற தரணி எவரேனும் இருப்பின் அவரது ஒப்பம் இடப்பட்டதாக அறிவித்தல் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதுடன், 1980ஆம் வருடம் சித்திரை மாதம் 24-ம் திகதி பிற்பகல் 6 மணிக்கு பிந்தாமல் மேலே கையொப்பம் இட்டவருக்குக் கிடைக்கத்தக்கதாக சேவிக்கப்பட வேண்டும் அல்லது தபாலில் சேர்ப்பிப்பதாயின் போதுமான காலத்தில் தபாலில் இடப்பட வேண்டும்.

சோ. லோகேஸ்வரன்

5428

---

6-4-1980-ல்
கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய கட்டிட நிதிக்காக அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்
சீட்டு இலக்கம் பின்வருமாறு

1-ம்பரிசு 8773, 2-ம்பரிசு 3390
3-ம்பரிசு 1885, 4-ம் பரிசு 994
5-ம்பரிசு 1255, 6-ம்பரிசு 1074
7-ம் பரிசு 9886, 8-ம்பரிசு 2280

பரிசின் இலக்கம் பெற்றவர்களுக்கு முகவரி மூலம் அறிவிக்கப்படும். மேலும் ரிக்கற்எடுத்து ஆதரவுதந்தவர்களை யோர்க்கும் செபமாலை அன்னையின் அருளும்-ஆசீரும்மென் மேலும் இருக்க வேண்டுகிறோம். — ஆலயசபை
5433

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கண்டி வீதி, இல: 29/1ஐச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துக்குமாரு வின்சன்ட் ஆசீர்வாதம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில், — மரணமெய்தியவர்

ஆசீர்வாதம் கைம்பெண் அந்தோனிப்பிள்ளை ரோசம்மா, 29/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். — மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம் இல: 3409

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள், எவரேனும் 1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றிஅவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்
1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ந் திகதி.
5426

---

## மின்சார அபிவிருத்திக்கு ரு 1லட்சத்து 40ஆயிரம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்க் கிராமசபைப் பிரதேசத்தில் இவ்வருடத்தில் மின்சார அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுவதற்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

---

நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### தற்காலிக கட்டிட தொழில் நுட்பவியலாளர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியும், அனுபவமும் உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள்யாவும் 11-4-80க்கு முன் சங்கத்தலைமைக் காரியாலயத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். சம்பளம் தகுதிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வழங்கப்படும்.

பொ. சோமாஸ்காந்தன்,
பொதுமுகாமையாளர்,
நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்,
5429 திருநெல்வேலி.

---

நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப் பத்திரம் வெற்றுச் சாக்கு

எம்மிடம் வெற்றுச்சாக்கு 10000, வெற்று சீமெந்துப் பைக்கட் 800, வெற்று காட்போட்பெட்டி500வரை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் விண்ணப்பபடிவத்திற்கு ரூபா 2/-ம், வைப்புப்பணம் ரூபா 500/-ம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை 16-4-1980-க்கு முன் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 21-4-1980-க்கு முன் பதிவுத்தபால் மூலம் சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பகாரர்கள் தபாலின் இடதுபக்க மேல் மூலையில் "சாக்கு கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

மேலும் எம்மிடம் உழுந்து, பயறு, மா போன்ற (தானியப் பொருட்கள்) கழிவுப்பொருட்களும கேள்வி விண்ணப்பமூலம் விற்பனை செய்யப்படவிருக்கின்றது. இவற்றையும் சங்க கடமை நேரத்தல் பார்வையிடலாம். இவற்றிற்குத் தனியாக விண்ணப்பிககவிரும்புவோர்வைப்புப்பணம்செலுத்தத் தேவையில்லை.

பொ. சோமாஸ்காந்தன்,
பொதுமுகாமையாளர்,
நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி,
5430 யாழ்ப்பாணம்.

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கேப்பை வங்காளி கலவன் 2 வயது கிடாரிகண்டு. வீட்டு வளர்ப்புக்குநல்லது. அம்பலம், பொன்னம்பலம் வீதி, ஆலடி, காரைநகர். 5424

நல்ல நிலையிலுள்ள 1200CC 12 உவோற்று 9 ஸ்ரீ VW கார் விற்டனைக்குண்டு. 355/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 5431

ஜப்பானில் இருந்து புதிதாக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட நல்ல நிலைமையில்உள்ள ஹொண்டா ( Honda ) CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சாந்தி ரயர் வேக்ஸ்' 218/2, பூனீஸ்வரர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 8085· 5418

காட்சியறை நிலையிலுள்ள 34ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட டோயோட்டோ ஹை யேஸ் (TOYOTO HIACE) வேன் விற்பனைக்குண்டு. 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5415

### தேவை

கண்ணுடித் தொழிற்சாலையில் வேலை பழகுவதற்கு 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் உடனே தேவை. நாளொன்றிற்கு 8 ரூபா 50 சதம் கொடுக்கப்படும். நேரில் வரவும் சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ், நீர்வேலி.

### FOR SALE

Akai 9500 EG VHF/UHF Colour Video Recorder with over 560 hours of English / Hindi Films plus 26 inch Phillip Auto Colour T V. All new from U K. Also many electrical items. Concrete Mixer, Electrical Tools, Fitting. Contact Nathan, Vadaliadaippu, Pandateruppu. 5422

1974 Model Leyland Boxer 11 Tons Lorry Chassis. 6 cylinder Engines. Excellent condition. Offer over 1·5 Just Registered. Imported from U. K. Contact Nathan, Vadaliadaippu,, Pandateruppu.. 5421

---

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 976 - இலக்க வழக்கில் வாதிகள் யாழ்ப்பாணம், 213, நாவலர் வீதி வைத்திலிங்கம் சரவணமுத்துவுக்கும் பெண் மனேன்மணிக்கும் விற்பனவுத் திகதிவரை போகவேண்டிய தீர்வைத தொகை ரூபா 23,885-65 சதமும் வழக்குச்செலவு ரூபா 588-64 சதமும், விற்பனவுச் சலார்களும் இத் தொகையை பிரதிவாதி யாழ்ப்பாணம், கொழும்புத்துறை ரேட், சந்தைதபாச்செட்டி குமாரசாமியிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படுமாதனம் 1980-05-08 வியாழக்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "உயிலடியும் பெரியவளவும் சிறுட்புலமும்" நில. பர. 2 குளிகள் 7 1/8, வீடும் குசினியும் பயிர்களும் பற்றுமதைச் சேர்ந்தவைகளும் ஆதன் எல்லைக்காரர்கள் கிழக்கும், வடக்கும் எஸ். கோவிந்தப்பிள்ளை, மேற்கு நாராயணபிள்ளை நவரத்தினம், தெற்கு நாவலர் ரேட் இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்.

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

5413

---


## பதவி வெற்றிடம்

I. CASHIER (பணக்கணக்காளர்)
II. LAND SALES OFFICER

கல்வி, வேலை அனுபவம் முதலிய சான்றிதழ்களுடன் 15 - 04 - 1980க்கு முன்னர், சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

நிருவாக முகாமையாளர் (யாழ்ப்பாணக் கிளை)

# த பினன்ஸ் கம்பனி லிமிட்.

249/c. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எங்கு உண்மை உளதோ அங்கு அகிம்சையும் உளது. எங்கு நிறை அகிம்சை உளதோ அங்கு உண்மையும் உளது. உண்மையும் அகிம்சையும் ஒரேயொருமெய்ப் பொருளின் இரு கூறுகள்.

— சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### கால்நடைகள் அழிவதைத் தடுக்க வேண்டும்

கருணை வள்ளல் சித்தார்த்தன் பரப்பிய பௌத்த மதம் வாழும் இந்நாட்டில் நாளாந்தம் "மேசை"க்குப் போகும் கால்நடைகள் ஏராளம்.

கால்நடைகளைப் பேணவும், பாற்பண்ணை விருத்திக்கும் இங்கு ஒரு அமைச்சு இருக்கின்றது ஆயினும் நாளாந்தம் கொல்லப்படும் பசுக்கள், எருதுகள் எத்தனை!

கொல்லப்படும் கால்நடைகள் நோயற்றதாக, உண்பதற்கு உகந்ததாக இருக்க, சுகாதார அலுவலர்கள் கடமையாற்றுகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் நாளாந்தம் இறைச்சிக்கென்று லொறிகளில் கொண்டு செல்லப்படும் கால்நடைகளை நோக்கும்போது, சுகாதார அலுவலர்கள் தம் கடமையைச் செவ்வனே செய்கிறார்களா என்ற சந்தேகம் எழுகின்றது.

கிராமப்புறத்துத் தெருக்களில், லொறிகள் மூலம் 'மேசை'க்குப் போகும் கால்நடைகள் எலும்பும் தோலுமாக, நோயுற்றவையாகவே காட்சிதருகின்றன. இவை மனிதன் உண்ணக்கூடிய, சுகாதாரமான இறைச்சியைத் தருவன என்று யாருமே சொல்ல மாட்டார்கள்! இவை சுகாதார அலுவலர்களால், தகுதியானவை என்று சிபார்சு செய்யப்படுகின்றனவா?

கால்நடைகளின் நோய்களைச் சுகப்படுத்தி அவற்றை, விவசாயத்திற்குப் பயன்படுத்தவும் எருவைப் பசளையாகப் பயன்படுத்தவும், வாழவைக்கும் பொறுப்பு விவசாயத் திணைக்களத்தைச் சார்ந்தது.

கால்நடைகள், பாற்பண்ணைகளைக் கவனிக்கும் அமைச்சு இத்துறையில் செவ்வனே செயல்பட்டாலன்றி கால்நடைகள் இந்நாட்டில் அழிந்து போவதைத் தடுக்க முடியாது. அசுத்தமான, நோய்தரும் இறைச்சியை மனிதன் உண்டு, நோயுற்றுச் சீரழிவதையும் தடுக்க முடியாது.

-எஸ். பி. கிருஷ்ணர்
செயலாளர்,
கலைமகள் ச. ச. நிலையம்,
தென் மட்டுவில்

### இசைவிழாவில் இன்று

(யாழ்ப்பாணம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுவரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 22-வது ஆண்டு தமிழ் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

மாலை 5-45 மணி அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவ மாணவிகள் பாட்டு வயலின் 6-30 மணி திருமதி இரஞ்சனா சுந்தரலிங்கம் பாட்டு செல்வி பாக்கியலட்சுமி நடராசா வயலின் திரு. ரி. பாக்கியநாதன் மிருதங்கம் 7-45 9-00 திரு. திலகநாயகம் போல் பாட்டு திரு. உ. ராதாகிருஷ்ணன் வயலின் திரு. ஏ. சந்தான கிருஷ்ணன் மிருதங்கம். (ஈ)

# "கல்வித்துறையில் குறைபாடுகளை நீக்காவிடில் ஜனநாயகம் அழிந்துவிடும்"

## துரைரத்தினம் எம். பி. எச்சரிக்கை

[புலோலி]

"நமது நாட்டின் கல்வி முறையில் உள்ள குறைபாடுகள் உடனடியாக நீக்கப்படாவிட்டால் ஜனநாயகம் சில நாளில் அழிந்துவிடும். எனவே அரசாங்கம் கல்வி முறையில் உள்ள குறைபாடுகளை நீக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். கல்வி முறையை அரசியலுடன் கலக்கக்கூடாது. இன்றைய கல்வி முறையால் எமது இளைஞர்களின் உள்ளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன"

இவ்வாறு பருத்தித்துறைக் கல்வி வட்டாரத்தில் மிகச் சிறந்த மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களையும் கௌரவிக்குமுகமாக நடாத்தப்பட்ட விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை எம். பி திரு. கே துரைரத்தினம் குறிப்பிட்டார்.

ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு டபிள்யு என். எஸ். சமுவேல் தலைமையில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

### ஆசிரியர் பற்றுக்குறை மோசமாகப் பாதிக்கிறது

"யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உடனடியாக 1500 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆசிரியர் பற்றுக்குறை மாணவர்களின் கல்வித்தரத்தை மோசமாகப் பாதிக்கின்றது. இன்றைய சமூகஅமைப்பில் திறமைக்கு இடமில்லாமல் போகின்றது. இது எமது இளைஞர்களின் மனதை மிகப் புண்படுத்திவருகிறது.

"புத்தகப் படிப்பால் மட்டும் உலகின் பூரண அறிவைப் பெற்றுவிட முடியாது. மாணவர்கள் விளையாட்டு, பேச்சு, தொழில்நுட்ப அறிவை வளர்த்தல், சமூகசேவை ஈடுபாடு ஆகியவற்றிலும் ஈடுபடுவதன் மூலமே பூரண அறிவைப்பெற்றுச் சிறந்த பிரஜைகளாக வாழ முடியும்."

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் உரையாற்றுகையில்: "எதிர்காலச் சந்ததியினரைக் கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பு ஆசிரிய சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் தமது தூயபணியைச் சிறப்பாகமேற்கொண்டால் எதிர்காலத்தில் எமது நாட்டைச் சுபீட்சப் பாதைக்கு அழைத்துச் செல்லும் தலைமைத்துவத்தைக் கொண்ட சிறந்த சமுதாய அமைப்பு எதிர்காலத்தில் உருவாகும்" என்றார். பட்டயக் கணக்காளர் திரு சோமசுந்தரம்பிள்ளையும் பேசினார்.

ஹாட்லிக் கல்லூரியைச்சேர்ந்த கே. ஜெகநாதன், எஸ். சுரேஸ், ஏ. மோகன், எஸ். பிரபாகரன், எஸ். வித்தியானந்தன், மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியைச் சேர்ந்த செல்விகள் என். வானுமதி, எஸ். சுமித்திரை. எஸ். கல்யாணி, எஸ். உதயராணி, நிர்மலா ஆகியோர் இக்கல்வி வட்டாரத்தின் மிகச்சிறந்த மாணவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். [அ]

### "சமயம் சார்ந்த வாழ்வுக்கு வழிகாட்டுவதுகந்தபுராணம்"

(யாழ்ப்பாணம்)

"அருமையான கதைகளின் மூலம் ஆழ்ந்த சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தும் சைவசமய நூல்களில் கந்தபுராணம் தலைசிறந்தது. இந்நூல் முழுவதும் சைவசித்தாந்தக் கருத்துக்களே விரவிக்கிடக்கின்றன. சைவசமய உண்மைகளையும், உயர்ந்த கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ள இந்நூல் சைவப் பெருமக்களைச் சமயம் சார்ந்த வாழ்க்கை நெறிக்கு வழிகாட்டும் அரும்பெரும் பொக்கிஷமாக எமக்குக் கிடைத்திருக்கின்றது."

அராலி தெற்கு இந்து இளைஞர் மன்றத்தினரால் அராலி ஆகாயக்குளம் பிள்ளையார் கோவில் முன்றலில் கொண்டாடப்பட்ட பங்குனி உத்தர விழாவில் 'கந்தபுராண நூல்' பற்றிய விசேஷ கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய இளைப்பாறிய அதிபர் திரு மு. சதாசிவம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சமாதான நீதவான் திரு. இ கந்தமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில், "சிவ சம்பந்தம் உடைய சைவசமயத்தில் சமய உண்மைகளைக் கூறும் நூல்கள், சமய வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்கள் அநேகம் உண்டு. அவற்றுக்கெல்லாம் சிகரமாக விளங்குவது கந்தபுராணம். இந்நூலைக் கற்று, இந்நூல் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளை உணர்ந்து, பின்பற்றி ஒழுக வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் பணியாகும்" என்றார்.

திரு. வி. வி மூர்த்தி பேசுகையில், "உயர்ந்த சமயக் கருத்துக்களையும், நல்வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய வாழ்க்கைத் தத்துவங்களையும் இறைவனின் பேரருட் செயல்களையும் வெளிப்படுத்தும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் போன்ற சைவசமய நூல்களை நாம் அனைவரும் குறிப்பாக இன்றைய இளைஞர்கள் கற்கவேண்டும்" என்றார்.

திரு. அ. வ. சுப்பிரமணியம், திரு. க. சின்னத்துரை, திரு. மு. கணபதிப்பிள்ளை, திரு. க மாசிலாமணி ஆகியோரும் உரையாற்றினர் (கெ-அ)

### தமிழரசுக் கட்சி மாநாடு கூட்ட ஒரு குழு!

(யாழ்ப்பாணம்)

உண்மையான தியாகங்களைச் செய்து தீவிரமாகச் செயலாற்றக்கூடிய கட்சி தமிழரசுக் கட்சியே. ஆகையால் உடனடியாக தமிழரசுக் கட்சி மாநாட்டைக் கூட்டவேண்டும்.

தந்தை செல்வாவின் பிறந்தநாள் விழாவையொட்டி உடுப்பிட்டி, பருத்தித்துறை தமிழரசுத் தொண்டர்கள் நடாத்திய கருத்தரங்கில், மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டுப்பிரார்த்தனையைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில், முன்னாள் உடுப்பிட்டி எம் பி. திரு. க ஜெயக்கொடி இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும்படி பணிக்கப்பட்டுள்ளார்.

பழைய உடுப்பிட்டி தொகுதி தமிழரசு கட்சி மாவட்டக் கிளை கூடி இத்தீர்மானத்தை வரவேற்றுள்ளதுடன். வடகிழக்கு மலையக தமிழரசுக் கட்சியினருடன் தொடர்பு கொண்டு. அதன்பின் தலைமைப்பீடத்துடன் பேசி, அவர்களை இணங்கவைத்து தமிழரசுக் கட்சி மாநாட்டை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழரசுக்கட்சி மாநாட்டை கூட்டுவதற்கு பின்வருவோரைக் கொண்ட உப குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. சட்டத்தரணி இ. உருத்திரன் (தலைவர்) திரு. [illegible] ஐயா, வி. தர்மகுலசிங்கம், இ. தர்மகுலசிங்கம்.

### தபால் தாமதம்

(உடுப்பிட்டி)

கொழும்பு-காங்கேசன்துறை மேலதிக கடுகதி ரயில் சேவையினால் தினமும் மெயில் ரயில் பல மணி நேரம் தாமதித்தே ரயில் நிலையங்களை வந்தடைகின்றது

இதனால் வட பகுதித்தபால் சேவைகளும் ஸ்தம்பிதமடைந்து வருகிறது. டவுண் ரத நிலையங்களில் மெயில் ரயில் தாமதமாக வருவதால் தபால்களைச் சேகரித்துச் செல்ல வரும் மெயில் பஸ் வண்டிகளும் திரும்பிச் சென்று விடுகின்றன

இதனால் அடுத்த பஸ் வண்டி வந்தே ரயில் நிலையங்களிலிருந்து தபாற் பொதிகளைக் கொண்டு சென்று தபால் நிலையங்களில் விநியோகித்து வருகின்றது. இதனால் தினமும் தபால் விநியோகம் பல மணி நேரம் தாமதம் அடைந்து வருகின்றது. (சு)

### ஆலயத்தில் சமத்துவ வழிபாடு

[நெல்லியடி]

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள துன்னாலை கோயிற் கடவைப் பிள்ளையார் ஆலயம் நேற்று முன்தினம் வழிபாட்டுக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் இவ்வாலயத்தினுள் சென்று வழிபட முடியாதிருந்தது. அன்னைக் காலத்தில் பருத்தித்துறைப் பொலிசாரும், நீதவானும் கூட்டிய சமரச மநாட்டை அடுத்து சமத்துவ வழிபாட்டிற்கான தீர்வு காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

### "ஆபரணத் தொழிலாளர் மீதான வரிகளை நீக்க நடவடிக்கை எடுப்பேன்"

-- குமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

"அன்றாடம் தமது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது ஆபரணத் தொழிலாளர்கள் கஷ்டப்படும் இவ்வேளையில் அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியை அவர்கள் செலுத்த முடியாது மேலும் கஷ்டப்படுகின்றனர். ஆதலால் அவர்கள்மீது விதிக்கப்பட்ட வரியை நீக்குவதற்கு ஆவன செய்வேன்."

லாய இலங்கையர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 4வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய தமிழ்க் காங்கிரஸ் கட்சியின்பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கூறினார். சங்கத் தலைவர் திரு. மு. பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு குமார் பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"ஆபரணத் தொழிலாளர் தமது தொழிலுக்குப் பாவிக்கும் வெடிஉப்புக் கூடத் தங்களுக்குப் போதியளவு கிடைப்பதில்லை என்றும் அப்பொருள் கள்ளச் சந்தையில் கூடுதான விலைகொடுத்து வாங்கவேண்டியுள்ளதால் அப்பொருட்களைச் சங்கத்தின் மூலம் கூடுதலாகப் பெறுவதற்கு உதவி செய்யும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர் சங்கத் தலைவரால் எனக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆபரணத்தொழிலாளர்களுக்கு பவுண் வாங்கி உதவி செய்தவர் எனது தந்தை அப்போது கைத்தொழில் அமைச்சு அவரின் கீழ் இருந்ததால் அவரால் ஆபரணத் தொழிலாளர்களுக்குப் பல நன்மைகளைச்செய்ய முடிந்தது. ஆனால் நிலைமை இப்போது அப்படியில்லை எப்படி இருந்தபோதும் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு என்னால் ஆன உதவிகளைச் செய்வேன்"

யாழ். மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது:

"ஆபரணத் தொழிலாளர்களுக்கு விதிக்கப்பட்ட வரியை நீக்கவேண்டுமானால் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் இச்சங்கத்தின் மூலம் மகஜர் அனுப்பப்பட வேண்டும். அத்தோடு யாழ். மாநகர சபைக்கும் ஒரு மகஜரை அனுப்பிவைக்க வேண்டும். அதன்பின் சங்க உறுப்பினர்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், மாநகரசபை உறுப்பினர்களுங்கூடி இது சம்பந்தமான நடவடிக்கையை எடுப்போம்.

"தொழிலாளர்களுக்குத் தேவையான வெடிஉப்பைப் பெற்றுத்தருவதற்கு எதிர்க்கட்சித்தலைவர்மூலம் முயற்சிகளை மேற்கொள்வோம். எதிர்க்கட்சித் தலைவர் மூலம் இவ்விடயத்தை பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்வோம். அதன்பின் நடைபெறுவதைப் பொறுத்திருந்துபார்ப்போம்" மற்றும்பலரும் உரையாற்றினர். (கொ-அ)

### விசேஷ பஸ் சேவை

(நெல்லியடி)

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த இறுதிப் பொங்கலை முன்னிட்டு விசேஷ பஸ்சேவைகளை நடாத்தியது

இறுதிப் பொங்கலில் கடந்த காலத்திலும் பார்க்கப் பெருமளவு பக்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்ணாமம் வசவத்தை முருகமூர்த்தி கோவிலில் "கந்தரனுபூதி" பற்றி ஒன்பது நாட்கள் விரிவுரையாற்றிய காரைநகர் சைவமணி வித்துவான் மு. சபாரத்தினத்தைக் கௌரவித்து ஆலய பரிபாலன சபைத்தலைவர் பொன்னாடை போர்த்தியபின்னர் சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் மலர் மாலை யணிவித்து ஆசிவழங்குகிறார்.

# உடுப்பிட்டியில் சாராய வடிசாலை, ஆராய்ச்சிநிலையம்

## விரைவில் நிறுவ ஏற்பாடு

[நெல்லியடி] உடுப்பிட்டித் தொகுதியில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையால் சாராய வடிசாலை ஒன்றும், ஆராய்ச்சி நிலையமொன்றும் விரைவில் நிறுவப்படவுள்ளது.

சாராய வடிசாலை சோறு வத்தை என்னுமிடத்திலுள்ள வெல்லத் தொழிற்சாலையில் இயங்கவுள்ளது. ஆராய்ச்சி நிலையம் மாணண்டி என்னுமிடத்தில் நிறுவப்படவுள்ளது.

இந்நிலையங்கள் அமையவுள்ள இடங்களைப் பனம் பொருள் அபிவிருத்திச்சபை ஆராய்ச்சியாளர் கலாநிதி மோகனதாஸ், உடுப்பிட்டி தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம், அபிவிருத்திச்சபை இணைப்பதிகாரி திரு சே. நடராசா, கட்டைவேலி — உடுப்பிட்டி தெ. ப. பொ. உ. வி. சங்க தலைவர் திரு வி. ஆறுமுகம் ஆகியோர் சகிதம் சென்று பார்வையிட்டார்.

சாராய வடிசாலை நிறுவுவதற்குக் கடந்த பல மாதங்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் உட்டிட வசதி இன்மையால் காலம் தாழ்த்தப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## புனித நகராக்க ஆய்வுவேலை

(மாவிட்டபுரம்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற கீரிமலையை நகர நிர்மாணத் திணைக்கள அதிகாரிகள் கீரிமலையில் ஆய்வுநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கீரிமலையை புனித நகராகப்பிரகடனம் செய்து அபிவிருத்தி செய்ய இந்து சமய விவகார அமைச்சர் திரு. செ. இராசதுரை முடிவு செய்து அண்மையில் இது பற்றி அறிவித்திருந்தார்.

இதனையடுத்தே நாடு நகர நிர்மாணத்திணைக்கள அதிகாரிகள் கீரிமலையில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கீரிமலையின் தொன்மை அங்குள்ள ஆலயங்கள் மடங்கள் நீர்நிலைகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## பலாலி கொலை முயற்சி வழக்கு:

# சட்டப்பிரச்னையால் பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பலாலி கொலை முயற்சி வழக்கு விசாரணை சட்டப் பிரச்னைகாரணமாக விசாரணை நடுவில் வேறொரு தேதிக்குப் பின்போடப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமில் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1979 ஆகஸ்ட் 6-ம் தேதி பலாலியில் குலத்துங்கம் என்பவர் இராயப்பு அருள்நாயகம் அல்லது கிளி என்பவனரக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் சிந்தாமணி என்பவரைக் கொலை செய்யமுயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ச. தம்பிரத்தினமும் சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினமும் ஆஜரானர்கள் அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராச ஆஜரானார்.

காயமடைந்த இராயப்பு அருளப்பு சாட்சியமளித்ததைத் தொடர்ந்து விசாரணை நடுவில் சட்டப்பிரச்னை காரணமாக வேறு ஒரு தேதிக்கு வழக்குப் பின்போடப்பட்டது. (க-அ)

## "கூட்டுறவுத்துறை

# அரசியல் தலைபீட்டால் மிகவும் பின்தங்கிவிட்டது"

(கோண்டாவில்)

"கூட்டுறவு ஊழியர்கள் கூட்டுறவுத்துறையில் தாம் கற்கும் கல்வியை தமக்கு மட்டும் பயன்படுத்தாது தான் தொழில் செய்யும் சங்கத்திற்கும் அப்பகுதி மக்களுக்கும் பயன்படுத்த வேண்டும். இன்று கூட்டுறவுத் துறைதான் பாரிய கடன்களை அரசிடமிருந்து பெற்று தொழில் முயற்சிகளை ஆற்றக்கூடிய வாய்ப்புக் கொண்டனவாக இருக்கின்றன. ஆனல் சங்கங்களின் கணக்குகள் சரியாக இல்லாமையினல் இத்தகைய கடன்களைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றன.

இவ்வாறு வடபகுதி தேசிய கூட்டுறவுச்சபையின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட திரு மு. ஆலாலசுந்தரம் கூறினர்.

யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரித் தலைவராக தெரிவு செய்யப்பட்டபின் முதல் தடவையாக விஜயம் செய்த திரு ஆலாலசுந்தரத்திற்கு கூட்டுறவுக்கல்லூரி அதிபர் திரு இ. சுப்பிரமணியம் தலைமையில் வரவேற்புவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் திரு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறிபதாவது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவரான நான் கூட்டுறவுத் துறையில் ஒரு மாணவனே கூட்டுறவுக்கல்வி என்பது மிகவும் புனிதமானது. கூட்டுறவைச் சிறந்த முறையில் வழிநடத்தும் பொறுப்பு ஊழியர்களிடமே உண்டு. ஆசியா நாட்டிலேயே கூட்டுறவுத் துறை மிகவும் முன்னேற்றம் அடைந்து காணப்பட்டது. இலங்கையிலேயே ஆனல் ஒன்று சில அரசியல் காரணங்களினல் பின்தங்க வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியிலும் கூட பூரணமாக கூட்டுறவு அறிவு வளர்ச்சி அடையவில்லை. ஊழியர்கள் மக்களுடன் அன்பாக பழகினல் தான் மீண்டும் பாவனையாளர்கள் கூட்டுறவுச் கடைகளை நாடுவார்கள் என்று குறிப்பிட்டார்.

தலைமை தாங்கிய திரு. இ. சுப்பிரமணியம் உரையாற்றுகையில் சுமார் இருபத்தைந்து வருடமாக இருந்த ஒருதலைமைத்துவம் நீங்கி புதிய தலைமைத்துவம் வந்துள்ளது. இந்நிலையில் கூட்டுறவுத்துறையினையும் முன்னேற்றமாக தொழிற்பட புதிய தலைவர் வழிசெய்வார். இன்று கூட்டுறவுக்கல்லூரி இடிந்துவிடும் நிலையில் காணப்படுகின்றது, இதற்கும் தலைவர் அவர்கள் வழிசெய்வார் என்றார்.

யாழ்.மாவட்ட தேசிய கூட்டுறவுச்சபையின் செயலாளர் திரு. பத்திநாதன் கூட்டுறவுக்கல்லூரியில் உயர் பிரிவில் கல்வி பயிலும் மாணவன் திரு. ஜெயக்குமார் சாதாரண பிரிவு மாணவன் திரு. நல்லதம்பி ஆகியோரும் பேசினர்கள். (கு)

## ஆசிரியருக்கு பிரியாவிடை

(பூநகரி)

பூநகரி மகா வித்தியாலயத்தில் மூன்று ஆண்டுகள் பதில் அதிபராகக் கடமையாற்றி பெரியபுலம் எம். எம். பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்ற திரு.நா.தணிகாசலம் பிள்ளைக்கு பிரியாவிடையளிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் திரு. இரா செல்வராசா தலைமையில் நடந்த வைபவத்தில் திரு. தணிகாசலம் பிள்ளையின் சேவையைப் பாராட்டி பலர் பேசினர்கள்.

# "பாவனையாளர் சங்கம் கிராமந்தோறும் தேவை"

(யாழ்ப்பாணம்)

"கறுப்புச்சந்தை வியாபாரிகளிடமிருந்து அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் கிராமங்கள் தோறும் பாவனையாளர் சங்கங்கள் அமைக்கப்படவேண்டும்" என்று ஏழாலையில் நடைபெற்ற பாவனையாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. கே. கே. மதிவதனன் கூறினர்.

கிராம சேவை அலுவலர் திரு. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு மதிவதனன் தொடர்ந்து பேசுகையில் "பாவனையாளர் சங்கங்கள் இல்லாத இடங்களில் வியாபாரிகள் பொருட்களின் விலைகளைத் தங்கள் விருப்பப்படி கூட்டி விற்று வருகின்றனர். தரமற்ற பொருட்களையும் பாவனையாளர்களுக்கு வழங்கிவருகின்றனர். எனவே பாவனையாளர்களைப் பாதுகாக்கவே பாவனையாளர்கள் சங்கங்கள் ஆக்கப்படுகின்றன" என்றார்.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. வை. நாகரத்தினம், செயலாளர்: திரு. த. கந்தசாமி, பொருளாளர்: திரு. அ. அருட்பிரகாசம், ஐந்துபேர் சபைஉறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்." (கொ-அ)

## செல்வா நினைவாலய

# சுற்றுப்பள்ளத்தை நிரப்ப மேலும் மண் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

செல்வா நினைவாலயத்தைச் சுற்றியுள்ள பள்ளத்தை நிரப்ப இன்னமும் மண், கல், மக்கி ஆகியன தேவைப்படுகின்றன. எனவே தமிழ்ப்பகுதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள், இளைஞர் பேரவைக் கிளைகள், மகளிர் பேரவைக் கிளைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன இதற்குத் தேவையான மண், கல் ஆகியவற்றைக்கொண்டுவந்து அப்பள்ளத்தை நிரப்ப முன்வர வேண்டுமென்று கோப்பாய் எம் பி. திரு. கதிரவேலுப்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை தமது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

செல்வா நினைவாலயம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இம்மாதம் 26ந் திகதி திறந்து வைக்கப்படும்.

நினைவாலயத்தைச் சுற்றியுள்ள பள்ளத்தை நிரப்ப மண், மக்கி, கல் ஆகியன தேவை என்ற எமது முன்னைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டபலர் ஒரு பகுதி பள்ளத்தை நிரப்பியுள்ளனர்.

இன்னமும் நிரப்பப்படாதிருக்கும் பகுதியை சிரமதான அடிப்படையில் லொறி, வண்டி டிராக்டர் மூலம் மண், கல், மக்கி ஆகியவற்றைக் கொண்டு நிரப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நல் இதயம் படைத்த தமிழ் இனம் தந்தை செல்வாவுக்காக இக் கடமையைச் செய்யும் என்றே நம்புகின்றேம்.

விரும்புவோர் தம்முடனே அன்றி திரு. ஈழவேந்தனுடனே இது குறித்து தொடர்பு கொள்ளலாம் என்றும் திரு. கதிரவேலுப்பிள்ளை தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# வீதியைக் கடக்க முயன்ற இளைஞர் வானுக்குப் பலி!

(பட்டக்களப்பு)

வீதியைக் கடக்க முயன்ற 21 வயது இளைஞர் ஒருவர் வான் ஒன்றினல் மோதப்பட்டு ஆஸ்பத்திரியில் மரணமானர்.

அக்கரைப் பற்று ஒலுவில் கிராமத்தைச் சேர்ந்த இப்ரு லெப்பை அபைர் என்ற இளைஞரே இவ் விபத்தில் பலியானவராவர்.

நேற்று முன்தினம் மாலை ஒலுவில் கிராமத்தில் இவ் விபத்து இடம் பெற்றது. பத்திரிகை வாங்க கடையிலிருந்து மற்றப்பக்கத்துக்குச் செல்வதற்காக வீதியைச் கடக்கையிலேயே இவ்விபத்து இடம் பெற்றது.

காலம் சென்றவர் நேற்று ஆரம்பமான ஜி சி ஈ.உயர்தரப் பரீட்சையில் தோற்ற இருந்தவர் என்று அறியப்படுகிறது. விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து மண்டை சிதறிய நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற அரைமணி நேரத்தின் பின்னரே அவ் வாலிபரின் உயிர் பிரிந்தது (இ)

## கழிவுண்டு; பொருளில்லை

(மாவிட்டபுரம்)

புதுவருடத்தையொட்டிப் பொருட்களின் விலையில் ஐந்து வீதம் கழிவு வழங்கப்படுமென விளம்பரம் இடப்பட்டுள்ள அதே நேரத்தில் அங்கு பொதுமக்களுக்கு தேவைப்படும் பொருட்கள் இல்லாமலிருக்கிறது.

இந்த விசித்திரம் மாவிட்டபுரத்திலுள்ள விற்பனை அபிவிருத்தித் திணைக்கள விற்பனை நிலையத்திலேயே இடம் பெறுகிறது.

இங்கு புதுவருடத்தை முன்னிட்டு பொருட்கள் வாங்குவோருக்கு பொருட்களின் விலையிலிருந்து 5வீதம் கழிவு வழங்கப்படும் என விளம்பரம் இடப்பட்டுள்ளது. ஆனல் அங்கு பொதுமக்கள் வாங்குவதற்கு மரக்கறி வகைகளோ உருளைக்கிழங்கு, தேங்காய் போன்றவைகளோ இல்லாமலிருக்கிறது.

வேறு கடைகளில் வாங்கக் கூடிய பொருட்களும், விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் ஐஸ்கிறீம் வகைகளுமே இங்கு வைக்கப்பட்டுள்ளன.

ஏனைய வர்த்தகர்கள் கொள்ளைலாபமடிக்கும் சில அத்தியாவசிய பொருட்களை இங்கு நியாய விலையில் பெறலாமென்றால் அது முடியாத காரியமாக உள்ளது.

மேற் கண்டவாறு பொது மக்கள் வாரிதும் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

## வேதாகம வகுப்பு

(அரியாலை)

வேதாகம விடுமுறை வகுப்பு இம்மாதம் 26-ந் திகதி தொடக்கம் கல்லூரி பரியாக் கோபு ஆலய ஜெப மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்வகுப்பை திரு. அல்பிரட் தேவதாசன் நடத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாகாணரீதியில் பிரிந்து போராடுவதால் பயனிராது"

## தென்னிலங்கை தொழிற்சங்கப் பிரமுகர் கருத்து

(யாழ்ப்பாணம்)

"தொழிலாளர்கள் மாகாண ரீதியில் பிரிந்துநின்று போராடுவதாலோ அன்றித் தனித் தனித் தொழிற்சங்கமாக நின்று போராடுவதாலோ நாம் முன்னெடுத்துச்செல்லும் போராட்டங்களில் வெற்றி அடையமுடியாது. தொழிலாளர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடுவதன் மூலம் தான் எமது கோரிக்கைகளைப் பெறமுடியும்."

அரசாங்கப் பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளையின் 31வது ஆண்டுக் கூட்டத்தில் கொழும்பிலிருந்து விசேஷமாகக் கலந்துகொண்ட தொழிற்சங்கத் தலைவர் திரு. டேவிற் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. டேவிற் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எதிர்வரும் மேதினத்தைச் சகல தொழிற்சங்கங்களும் ஒன்றுசேர்ந்து கொண்டாட வேண்டும். அதன் மூலம் தொழிற்சங்கங்களினதும் தொழிலாளர்களதும் ஒற்றுமையைப் பலப்படுத்தவேண்டும்.

"மே மாத நடுப்பகுதியில் ஒரு நாள் இலங்கை பூராவும் துக்கதினமா[illegible]அனுஷ்டிக்க எண்ணியுள்ளோம். தொழிலாளர்களின் எதிர்ப்பை அரசுக்கு எடுத்துக்காட்ட அன்றைய தினத்தைச் சகல தொழிலாளர்களும் துக்க தினமாகக் கொண்டாடவேண்டும்.

"விலைவாசி உயர்வினாலும், கூப்பன்களை இல்லாமற் செய்ததாலும், தாராள இறக்குமதிக்கொள்கையாலும் தொழிலாளர்கள் மட்டுமன்றிச் சாதாரண பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பொதுமக்கள் போராட்டங்களில் பங்குபற்றப்போவதில்லை. அதனால் பொதுமக்களுக்கும் சேர்த்துத் தொழிற்சங்கங்களே போராட்டங்களை நடாத்தவேண்டும். எமது ஒற்றுமைப்பட்ட போராட்டத்தினால் தொழிலாளர்களும், பொதுமக்களும் நன்மையடைய முடியும்."

### தொழிலாளி வர்க்கத்தை அரசு நசுக்கினால்...

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க உப தலைவர் திரு. எல். எ[illegible]. டி. சில்வா பேசுகையில் கூறியதாவது

"ஜனாதிபதி ஜே. ஆர்., தொழிலாளர்களை மட்டந்தட்டி அவர்களின் பலத்தைக் குறைப்பதற்காகப் பல சட்டங்களைக் கொண்டுவந்தார். அந்த அடக்குமுறைச் சட்டத்திற்கு எதிராக நாம் பலத்த போராட்டத்தை நடத்தினோம். மேலும் அரசு தொழிலாளி வர்க்கத்தை அடக்கி ஒடுக்க முன்வருமானால் அதை எதிர்த்து, அரசை வேரோடு கிள்ளியெறியத் தொழிலாளர்கள் ஒன்றுதிரளவேண்டும்."

"தொழிலாளர்களின் 45 நாள் லீவுக் குறைப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தினத்தில் நாம் மறியல் போராட்டம் நடத்தினோம். அப்பொழுது ஜனாதிபதியோ அன்றி அமைச்சர்களோ பாராளுமன்றம் செல்ல முடியாதநிலை ஏற்பட்டது. அதன் பயனாகப் பொலிசாரும், குண்டர்களும் வரவழைக்கப்பட்டு மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடைபெற்றது. தாக்குதலுக்குள்ளான பல தொழிலாளர்கள் இன்றும் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். எமது ஒன்றுபட்ட போராட்டத்தினால் லீவுக் குறைப்பு நிறுத்தப்பட்டது."

### தமிழர் உரிமைக்காகவும்...

அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. த. நமசிவாயம் பேசுகையில் கூறியதாவது:

"1947ம் ஆண்டு திரு. இலங்கரத்ன தலைமையில் காலிமுக மைதானத்தில் ஒரு மாபெரும் தொழிலாளி வர்க்கக் கூட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அன்று ஆரம்பமான இப்போராட்டம் இன்றுவரை தொடர்ந்து நடைபெறுகிறது.

"தொழிலாளி வர்க்கத்தின் கஷ்டத்தைப் போக்கவோ, அன்றி அவர்களின் வாழ்வை உயர்த்தவோ இதுவரை எந்த அரசும் முயற்சிக்கவில்லை.

தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் தமிழ்மக்களின் உரிமைக்காகவும் சேர்த்துப் போராட்டம் நடத்தத் தொழிற்சங்கங்கள் முன்வர வேண்டும்.

யாழ். கச்சேரியில் 15 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பலர் இன்றும் தற்காலிக ஊழியர்களாகவே இருக்கிறார்கள். வேறு கச்சேரிகளில் தற்காலிக ஊழியர்களாக வேலைசெய்த பலர் இன்று நிரந்தரமாக்கப்பட்டு யாழ். கச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஆனால் யாழ் கச்சேரி ஊழியர்கள் மட்டும் நிரந்தரமாக்கப்படாதது வேதனைக்குரியது. அவர்களின் உரிமைக்காக நாம் போராடவேண்டும்.

### அரசியல்வாதிகளை நம்பக்கூடாது

திரு. எஸ். கனகரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

"சிறிமா ஆட்சியில் அரைருத்தல் பாணாவது எல்லாருக்கும் சமமாகக் கிடைத்தது. இந்த அரசில் எல்லாச் சாமான்களும் இருக்கின்றன. ஆனால் அவற்றை எம்மால் பார்க்கத்தான்முடியுமே தவிர வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை.

"தொழிற்சங்கத் தலைவர்கள் அரசியல்வாதிகளாக இருக்கும்வரை தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடையாது. தொழிலாளர்கள் அரசியல் தலைவர்களை நம்பக்கூடாது. தொழிலாளர்களைத் தலைவர்களாகக்கொண்டு ஒற்றுமைப்பட்டுப் போராட வேண்டும். அப்போதுதான் தொழிற்சங்க சம்மேளனம் முன்வைத்த 23 அம்சக் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்." (கொ-அ)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

773 வது தேசிய சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு:

**12 G 0613**

ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு:

**19 E 0986**

ரூபா 40,000

மூன்றாவது பரிசு:

**12 R 0219**

ரூபா 10,000

தலா ரூபா 1,620 வீதம் ஆறுதல் பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகளின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 05 A 0926 | 06 A 0271 |
| 11 A 0260 | 11 A 0285 |
| 11 A 0514 | 17 A 0380 |
| 18 A 0150 | 18 A 0828 |
| 27 A 0233 | 32 A 0068 |
| 24 B 0579 | 27 B 0882 |
| 21 C 0863 | 24 C 0104 |
| 17 D 0176 | 27 D 0006 |
| 28 D 0269 | 30 D 0765 |
| 06 E 0991 | 15 E 0509 |
| 23 E 0246 | 23 F 0150 |
| 22 F 0908 | 24 F 0007 |
| 30 F 0281 | |
| 07 G 0220 | 20 G 0358 |
| 28 G 0527 | |
| 04 H 0650 | 13 H 0266 |
| 27 H 0824 | |
| 18 J 0330 | 25 J 0605 |
| 27 J 0514 | |
| 07 K 0211 | 11 K 0538 |
| 29 K 0937 | |
| 06 L 0792 | 07 L 0488 |
| 08 L 0747 | 17 L 0678 |
| 23 L 0950 | 24 L 0611 |
| 28 L 0240 | 28 L 0260 |
| 28 L 0728 | |
| 01 M 0478 | 02 M 0991 |
| 12 M 0276 | 22 M 0809 |
| 25 M 0336 | 29 M 0109 |
| 29 M 0159 | |
| 08 N 0338 | 15 N 0916 |
| 19 N 0858 | 19 N 0775 |
| 21 N 0998 | 23 N 0856 |
| 29 N 0325 | |
| 16 O 0242 | 20 O 0229 |
| 29 O 0507 | 32 O 0871 |
| 11 P 0053 | |
| 30 Q 0977 | 04 Q 0798 |
| 12 Q 0071 | 15 Q 0437 |
| 29 Q 0339 | |
| 11 R 0097 | 20 R 0484 |
| 31 R 0537 | |
| 14 S 0437 | |
| 01 T 0515 | 19 T 0464 |
| 03 U 0178 | 05 U 0132 |
| 19 U 0574 | |
| 02 V 0094 | 19 V 0983 |
| 15 V 0990 | 26 V 0117 |
| 07 W 0919 | 12 W 0366 |
| 19 W 0850 | 21 W 0837 |
| 02 X 0172 | 03 X 0281 |
| 06 X 0263 | 09 X 0964 |
| 11 X 0399 | 31 X 0488 |
| 10 Y 0316 | 13 Y 0420 |
| 15 Y 0478 | 21 Y 0682 |
| 32 Y 0006 | |
| 16 Z 0503 | 26 Z 0748 |

இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## உவகை அழைத்த உலா!

மனதுக்கு உவகையும் உற்சாகமுமாக இருந்தது. இப்போதுதான் அந்த ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் நுண்கலைப் பிரிவும் இணைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அதற்கு முன்னரேயே பல ஆண்டுகளாக [illegible] இல்லங்களிடையே போட்டியாக நாட்டிய நாடகங்களை அரங்கேற்றுவது அந்த கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஒரு மரபாகவே தான இருந்துவந்திருக்கிறது.

இப்போது நுண்கலைப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டபின்னர் இசைநாட்டிய ஆசிரியமாணவர்களும், விரிவுரையாளர்களும் அங்கு இருக்கிறார்கள்.

இம்மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட தொகையாகவிருந்தாலும் மற்றைய நெறி மாணவர்களையும் சேர்த்து மூன்று இல்லங்களும் இப்போது மேலும் சிறப்பாக ஒவ்வொரு நாட்டிய நாடகத்தை மேடையேற்றுகின்றன.

போட்டிதான்; ஆனால் அங்கு பொருமை இல்லை. அதனால் உற்சாகம் ஒத்துழைப்பு, பரஸ்பர மனப்பாங்கு இப்படி இவை யெல்லாவற்றுடனும் மேலான கலையுணர்வு வளர்கிறது. கலையும் வளர்கிறது.

இது மனதுக்கு உவகை, உற்சாகத்தை அளிக்காதா என்ன?

நாட்டிய நாடகங்களைத் தயாரிப்பதில் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனாலும் அவைமுற்றாகவே அனுசமுடியாதவையா?

திருமதி ஆனந்தக்குமாரசாமி கோப்பாய் ஆசிரியகலாசாலையின் அதிபர் - உழைப்பும் உற்சாகமும் மிகுந்தவர்.

ஆண்டுதோறும் தயாராகும் இந்த நாட்டிய நாடகங்கள் பொதுப்பணியில் ஈடுபடும் பொதுஸ்தாபனங்களுக்கு நிதியுதவி அளிப்பதிலும் உதவ முடிந்தால்......'

—இதுவும் அவருக்கு ஓர் அவா

யாழ்ப்பாணத்துக்கு ஒரு புற்றுநோய் சிகிச்சை நிலையம் அவசியம்; அதை நிறுவும் முயற்சியில் லயன்ஸ் கழகம் போன்றவை நிதிசேகரிப்புக்காகக் கோரினால் இலவசமாகவே இந் நாட்டிய நாடகங்களை நாம் அவர்களுக்கு அளிப்போம் என்று சொல்கிறார் அந்த அதிபர்.

இவ்வாண்டுக்கான போட்டியையும் அண்மையில் பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

அந்தவேளையில்தான்திருமதி ஆனந்தக்குமாரசாமி பேச்சுக் கொடுத்தார்.

எத்தனை லாவகமாக-முழு நேரமுமே ஈடுபாடுடைய வைத்து அந்நாட்டிய நாடகங்கள் மூன்றையும் அவர்கள் அளித்தார்கள்.

—அந்த உவகை, உற்சாகத்தில் மனம் வேறோர் இடத்தையும் நாடி உலவ ஆரம்பித்துவிட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பீடம் ஆரம்பித்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன.

முதல்தொகுதி மாணவர்கள் இறுதி ஆண்டுத்தேர்வை முடித்துக்கொண்டு ஜூன் மாதம் வெளிப்படப்போகின்றார்கள்.

ஆனால், இந்த நாலாண்டுக் காலத்தில் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் அதன் ஆக்கமாக பொதுமக்களுக்கு எதனை வெளிப்படுத்தியிருக்கின்றது?

பரதநாட்டியம், கதகளி, வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், வீணை என்று இவற்றையெல்லாம் பிரதான கற்கை நெறியாகக் கொண்டு ஏராளமான மாணவர்கள் அங்கு பயில்கிறார்கள்.

இத் துறைகளில் எல்லாம் தேர்ந்த ஆற்றல்மிக்க விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் அங்கு இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோருமாக இணைந்து எத்தனை ஆக்கபூர்வ முயற்சிகளை சாஸ்திரிய ரீதியிலும் கிராமிய ரீதியிலும் மேற்கொள்ளமுடியும். மேற்கொள்ள வேண்டும்?

ஆய்வரங்குகள் கூட அவசியமல்லவா?

வளரும் குழந்தைதான் ஆனாலும், ஓர் ஆசிரியபயிற்சிக்கலாசாலை இப்படியாக வெல்லாம் தனது முயற்சிகளை உவகையூட்டி வெளிப்படுத்தும் போது இறுதியாண்டு மாணவர்கள் வெளிப்படும் வேளையிலாவது நமது பல்கலைக்கழக நுண்கலைப் பீடந்தான் நாலாண்டு ஆக்க வளர்ச்சியை விரிவுரையாளர்களும் மாணவர்களுமாக நமக்காக அளிப்பார்களா?

மனதின் அந்த உலா நிலைவத்தைத்தான் அப்போது சந்தித்தது.

— ராஷி

## நாவாந்துறை நில மீட்சித்திட்டம்

# 2 மாத காலத்தில் 5 ஏக்கர் பூர்த்தி!

## பொறியியலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி அமைச்சினால் சுமார் 35 லட்சம் ரூபா செலவில் நாவாந்துறை கடல் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட நில மீட்சி திட்டத்தில் இதுவரை 5 ஏக்கர் கடல் நிரப்பப்பட்டுள்ளது.

இத்தகவலை இத்திட்டப் பொறுப்பாளர் பொறியியலாளர் திரு. க. சரவணபவான் நேற்றுத் தெரிவித்தார்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 25ம் தேதி, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் இத்திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

21 ஏக்கர் கடற் பரப்பில் மண் நிரப்பி கடலுக்கும் நிலத்திற்கும் இடையில் பொருப் அணை கட்டுவதுதான் இத்திட்[illegible] ளார் திரு. சரவணபவான் தெரிவித்தார்.

இத்திட்டம் பூர்த்தியான[illegible]து. இந்நிலத்தில் 160 வீடுகளைக்கொண்ட வீடமைப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கடல் மட்டத்திலிருந்து 5 அடி உயரத்திற்கு மண் நிரப்பப்பட்டுவருகிறது.

தினமும் 30 டிராக்டர்கள், நிலம் மீட்சி திட்டத்தில் ஈடுபட்டுவருவதாகவும், 350 டிராக்டர் லோட் மண் நிரப்பப்பட்டிருப்பதாகவும் திரு. சரவணபவான் தெரிவித்தார். ஆனைக்கோட்டைப் பகுதியிலிருந்து மண் கொண்டுவரப்படுவதாகவும் அவர் கூறினார்.

வடக்கில் முதலாவது நில மீட்சி திட்டம் இதுவாகுமென்றும் அவர் கூறினார்.

இத்திட்டம் இவ்வருட இறுதியில் பூர்த்தியாகும் என உத்தேசிக்கப்பட்டிருந்தபோதிலும் செப்டம்பரில் இத்திட்டத்தை பூர்த்தி செய்ய துரிதமாக வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்திற்கு நடுவில், கடலுடன் தொடர்பான வாய்க்கால்பற்றி தெரிவிக்கையில், அந்த வாய்க்காலை, ரேட் இப்பக்கமாகத் திசை திருப்பி வேறு வழியால் கடலுக்குள் விட தீர்மானித்திருப்பதாகவும், திட்டத்தின் நடுவிலுள்ள வாய்க்கால் நிரப்பப்படுமென்றும் அவர் கூறினார். (க)

## நிதி திரட்டினர்

(உடுப்பிட்டி)

வடமராட்சிக்கு விஜயம் செய்த நவ சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவ நாணயக்காரா, கலாநிதி குமார் டேவிற், திரு திலீப் ரஞ்சன் ஆகியோர் வதிரி, பருத்தித்துறை ஆகிய இடங்களின் உண்டியல் மூலம் கட்சிக்கான நிதியைத் திரட்டினர்.

[illegible] நவ சமசமாஜக் கட்சியின் வடமராட்சிக் கிளை உறுப்பினர்களாகிய திருவாளர்கள் எஸ். முருகேசு, ரி. வீரசிங்கம், என். எம். ஆறுமுகம், வி. ரகுநாதன் வி. பாஸ்கரன், டாக்டர். என். பாலிலாமணி ஆகியோர் உட்படப் பல இளைஞர்கள் கலந்துகொண்டனர். (வ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பணயக் கைதிகள் விவகாரம்

# "ஈரான்மீது அமெரிக்கா போர் தொடுக்கும்"

# புரட்சிசபைமுடிவைஅடுத்துகார்ட்டர்எச்சரிக்கை

## ராஜதந்திர உறவுகளும் துண்டிப்பு

வாஷிங்டன், ஏப்ரல், 8

ஈரானில் உள்ள அமெரிக்க பணயக் கைதிகளைத் தொடர்ந்தும் மாணவர்களின் பொறுப்பில் வைத்திருக்க அனுமதிப்பதென்று ஈரானிய புரட்சி மன்றம் தீர்மானித்ததையடுத்து அமெரிக்கா ஈரானுடனான சகல ராஜதந்திர உறவுகளையும் துண்டித்துள்ளது.

தற்பாதுகாப்புக் கருதி அமெரிக்கா ஈரான் மீது படைபலத்தை பயன்படுத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ஈரானிய தூதுவர் உட்பட 34 ராஜதந்திரிகளையும் மற்றும் மாணவர்கள், இராணுவ அதிகாரிகளையும் 24 மணி நேரத்தில் நாட்டைவிட்டு வெளியேறுமாறும் அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

ஈரானிய புரட்சிமன்றத்தின் தீர்மானத்தையடுத்து பணயக் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கலாம் என்ற நம்பிக்கை அற்றுப்போய்விட்டதைத்தொடர்ந்தே அமெரிக்கா மேற்கண்ட நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா படைபலத்தை பிரயோகிப்பது மட்டுமல்லாது வேறுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்றும் அமெரிக்க அதிபர் கூறியுள்ளார்.

### ஈரானியருக்கு

### யு. எஸ். வரத் தடை

ஈரானிய மக்கள் அமெரிக்கா வருவதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் அமெரிக்காவிலிருந்து ஈரானுக்கு அனுப்பப்படும் சகல ஏற்றுமதிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது

### வெளியேற மறுப்பு

இதேசமயம் அமெரிக்காவிலிருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்ட உத்தரவுப்படி நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஈரானிய தூதுவரும் தூதரக அதிகாரிகளும் மறுப்புத்தெரிவித்துள்ளனர்.

ஈரானில் தற்போதும் ஷாவின் ஆட்சியே நிலவி வருவதாகவே அமெரிக்கா எண்ணிவருகிறது என்று ஈரான் தூதுவர் தெரிவித்துள்ளார். (இ)

அரபுக்கடலில்

## அமெரிக்க படைபலம் அதிகரிப்பு

வாஷிங்டன் ஏப். 8

ஈரான்—அமெரிக்க நெருக்கடி மீண்டும் வலுவடைந்துள்ளதை அடுத்து அரபுக்கடலில் அமெரிக்கப் படைப்பலம் அதிகரிக்கப்பட்டுவருகிறது.

அரபுக்கடலில் தற்போது தங்கியிருக்கும் போர்க்கப்பல்களுக்கு மேற்கொண்டுதேவைப்படும் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு ஏழு கப்பல்கள் உடனடியாக அரபுக்கடலுக்குச் செல்லும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. பிரவுண் தெரிவித்தார்.

தென் மேற்கு ஆசிய பிராந்தியக்கடலில் நிலைகொண்டிருக்கும் சோவியத் படைகளைவிட அமெரிக்கபடைப்பலம் அதிகம் என்றும் அவர் கூறினார். [இ]

### ஒரு கோடி ரூபா செலவில் மாணவிகள் விடுதி

சென்னை, ஏப்ரல் 8

தமிழ்நாட்டில் ஹரிஜன மாணவிகளுக்கு 50 விடுதிகளைக் கட்ட ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (இ)

பணயக் கைதிகள்

# மாணவர்கள் வசமே தொடர்ந்தும் இருப்பர்

## ஈரான் சமயத் தலைவர் தீர்மானம்

தெஹ்ரான், ஏப். 8

ஈரானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பணயக் கைதிகளை இப்போதைக்கு மாணவர்கள் பொறுப்பிலேயே விடுவதென்று ஈரானிய புரட்சி மன்றத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி தீர்மானித்துள்ளார்

அயத்தொல்லாவின் இத் தீர்மானத்தை ஈரானிய புரட்சி மன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

அமெரிக்கப் பணயக் கைதிகளை மாணவர்களிடமிருந்து அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஜனுப் ததுப்ஸாதே, ஜனுப் பாணிசதார் ஆகியோர் புரட்சிமன்றக் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

இதே வேளையில் பணயக் கைதிகள் தொடர்ந்தும் மாணவர்கள் பொறுப்பில் இருந்தால் ஈரானுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கநேரிடும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ)

### இகாங்.திமுகவுக்கு லோக சபை தொகுதி ரீதியிலும் சமமான இடங்கள்

சென்னை.ஏப் 8

தமிழக சட்ட சபைத்தேர்தலில் கூட்டாகப் போட்டியிடும் தி.மு க.வுக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் பாராளுமன்ற தொகுதிகள் தோறும் சமமான சட்ட சபைத் தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் பி எம்.பி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தாம் திமுக தலைவர் மு.கருணாநிதியுடன பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும் இப் பேச்சு வார்த்தைகள்புதுவருடத்திற்கு முன் முடிந்து விடும் எனத் தாம் நம்புவதாயும் திரு.சுப்பிரமணியம் கூறினார். (இ)

### இந்திராகாங்கிரசில் சேர்ந்தனர்

சென்னை, ஏப்ரல் 8

தமிழ்நாடு அர்ஸ் காங்கிரஸ் தலைவர் திரு. செஞ்சிரமணன், தமிழ்நாடு மக்கள் கட்சி செயலாளர் திரு. ஜானகி ராமன் ஆகியோர் நேற்று இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டனர். (இ)

கார்ட்டருடன் பேச்சு நடத்த

# பெகின், சதாத் அமெரிக்கா விஜயம்

வாஷிங்டன், ஏப். 8

பாலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டருடன் பேச்சு வார்த்தை நடத்தும்பொருட்டு எகிப்து அதிபர் அன்வர் சதாத் அமெரிக்கா வந்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினும் திரு. கார்ட்டருடன் பேச்சு வார்த்தை நடத்த அமெரிக்கா வந்துள்ளார்.

மத்தியகிழக்கு அமைதி குறித்து ஓராண்டுகாலமாக நடைபெற்ற எகிப்து - இஸ்ரேல் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததை அடுத்தே இவர்கள் இருவரும் திரு. கார்ட்டருடன் பேச்சு நடத்த இங்கு வந்துள்ளனர் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

### வட்டு. 'திரு' கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

காரைநகரில் விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் விற்பனை நிலையமொன்றை அப்பகுதிப் பொதுமக்களின் நலன்கருதி விரைவில் திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விற்பனை அபிவிருத்தித் திணைக்கள யாழ். பிரதேச ஆணையாளரை வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பி, திரு. தா. திருநாவுக்கரசு கடித மூலம் கேட்டுள்ளார். [இ]

## இஸ்ரேலுக்குள் பாலஸ்தீன கமாண்டோக்கள் தாக்கு

### எதிர்த்தாக்குதலுக்கு தயார்

ஜெரூஸலம், ஏப். 8

இஸ்ரேலின் வடபகுதி எல்லையினுள் புகுந்த பாலஸ்தீன கொரில்லா கமாண்டோக்கள் குடியிருப்புப் பிரதேசத்தில் நடத்திய திடீர் தாக்குதலில் இரு இஸ்ரேலியரும் 5 பாலஸ்தீன கொரில்லாக்களும் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலுக்கு இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தும் என எதிர்பார்ப்பதால் லெபனானில் படைகள் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேலின் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதை வலியுறுத்தியே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

கமாண்டோக்களின் இத் தாக்குதலை ஐ.நா.பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் கண்டனம் தெரிவித்துள்ளார். (இ)

பேராபத்து

# ஈராக் படைகள் உஷார் நிலையில்!

பக்தாத், ஏப். 8

ஈராக்கிலிருந்து ஆயிரக்கணக்கான ஈரானியர்கள் வெளியேற்றப்பட்டதை அடுத்து ஈரான் ஈராக்மீது போர் தொடுக்கலாம் என்ற அச்சத்தில் ஈராக்படைகள் உஷார்


(7-ம் பக்கம் பார்க்க)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்




- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் பூச்சிகளை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 11/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வூட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ். கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4th CROWDED WEEK
REGAL JAFFNA. Phone: 580
Daily 4 shows
Daily at a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

வெலிங்டன் Daily 10-30 a. m., 2-15, 4-45, 7-00, & 9-30 p.m.
(யாழ்ப்பாணம்)
Horror of Frankenstein
(Strictly for Adults)

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
(யாழ். நகர்) போன்: 7698
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, மன்குமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-எல். விஜயலக்ஷ்மி
வல்லவன் ஒருவன் (புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் [கடைசி இரு தினங்கள்]
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா. சுந்தரராஜன்
நடித்த
திருடன் (புதிய பிரதி)
11-4-80 முதல் புத்தாண்டு வெளியீடு!
இரத்தத்தின் இரத்தமே (ஈஸ்மன் கலர்)

மகத்தான தமிழ் சிங்களப் புத்தாண்டு வெளியீடு!
சாந்தி யாழ் நகர் போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ராஜேஷ் கன்னா (இரட்டைவேடம்), சர்மிலாதாகூர்
"டாஹ்" ஹிந்தி
ஈஸ்ட்மன் கலர்
இசை: லக்ஷ்மிகாந்த் பியாரலால். காதுக்கினிய பாடல்கள், கண்கவர் நடனங்கள். பரபரப்பூட்டும் பயங்கரச் சண்டைக் காட்சிகள் யாவும் ஒருங்கே அமைந்த வண்ணத் திரையோவியம்
"DAAG" Hindi in Eastman color
RAJESH KANNA (Duel Role), SHARMILA TAGORE
Music: Laxmikant Pyarelal
Full of Music & Action Packed Movie

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 27-ம்திகதி (9-4-80) புதன்கிழமை

மேடம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு புதியவாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இடபம்: காரியங்கள் அனைத்திலும் கைகொடுப்பதற்கு வீட்டிலுள்ள அனைவரும் முன்வருவார்கள். இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும். தெய்வவழிபாட்டில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள்.

மிதுனம்: மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபடவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் அவசரப் போக்கைத் தவிர்த்துக்கொள்ளவும். நீண்ட பிரயாணத்தை இன்று தள்ளிப்போடுவது விரும்பத்தக்கது.

கடகம்: குடும்பம் இன்று கலைக்கோவிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினால் பெருமைபடக்கும் இடமுண்டு.

சிங்கம்: முயற்சியால் முட்டுக்கட்டை தென்படும். மற்றவர்களிடம் குறைகேட்க நேரிடும். நண்பர்களின் தொல்லை எரிச்சலைத் தரலாம். சிலருக்கு உடல்நலம் பாதிக்கப்படும். துயர்படிந்த தினம்.

கன்னி: உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்பு தென்படும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடம் உண்டு. பெரியவர் ஒருவர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர்.

துலாம்: அலுவலகத்தில் நாட்டம் பிறக்கும். தாராளசிந்தை மேலிடும். எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்றுக்கு இன்று வழிகோலப்படலாம். மதிப்பு உயரும்.

விருச்சிகம்: அதிர்ஷ்ட லாபங்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. புதுத்தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏற்ற தினம். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரும். செல்வாக்கு வளரும்.

தனு: வாழ்க்கை மந்தநிலையில் நடைபெறும். எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் பாதிக்கப்படும். சகோதர வழிமூலமும் சஞ்சலமான செய்தியும் கிடைக்கலாம். உடல்நலத்தைப் பேணவும்.

மகரம்: விரக்தி நிலை உருவாகும். வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக

கும்பம்: பெரிய இடத்துச் சினேகிதம் இன்று ஏற்படலாம். சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும். புது வழிகளின்மூலம் பணம் கிடைக்கும். சுடுப்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு.

மீனம்: சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கும் இடம் உண்டு. வாய்வுப்பதார்த்தங்களை தவிர்ப்பதுடன் தெய்வ நம்பிக்கை நன்மை தரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
K. R. விஜயா
பால்மனம்
(புதிய பிரதி)

வெஸ்லி
(சாவகச்சேரி)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நாகேஷ்

# மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டம்

(மாவிட்டபுரம்)
மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டம் குறித்து கிளைக்குழுக்கள் மூலம் மகளிரிடையே பிரசாரம் செய்வதற்கு தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சங்கத்தின் ஒவ்வொரு கிளைகளிலும் கிளைக்குழுக்களின் உதவியுடன் தலா 10 பேரைச் சேர்த்து அவர்களுக்கு அத்திட்டம் பற்றி விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்ட கல்வி உதவியோகத்தர் திரு. இ. கணபதிப்பிள்ளையும் சகல கிளைக்குழுக்களையும் கோரி உள்ளார்.

10ம் இலக்க காங்கேசன்துறைக் கிளையில் மேற்படி கூட்டம் நாளை நடாத்தப்படவுள்ளது. (இ)

## சமாதான நீதவான்



சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட நல்லூரைச் சேர்ந்த கந்தையா காசிப்பிள்ளை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும் செங்குந்தா இந்துக்கல்லூரிப் பழைய மாணவருமான இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

# கிரிக்கெட் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். உலோகத் தொழிற்சாலைக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், சூராவத்தை ஜோனியன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். உலோகத் தொழிற்சாலைக் கிரிக்கெட் கோஷ்டி 30 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ். உலோகத் தொழிற்சாலைக் கோஷ்டிக்கு ஆர். மதியரத்தினமும், ஜோனியன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு திரு உதயகுமாரும் தலைமைதாங்கினார்கள்:

யாழ். உலோகத் தொழிற்சாலைக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், யாழ். வர்த்தக வங்கிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது (க.)

## ஈராக்..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்- ஈராக் நெருக்கடி வலுவடைந்துள்ளதை அடுத்தே ஈரானியர்கள் ஈராக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து ஈராக் அரசை ஈரான் மக்களே கவிழ்ப்பார்கள் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது தெரிந்ததே. (இ)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சந்திரபாபு
கவலை இல்லாத மனிதன்

# இன்று நடக்கும் விளையாட்டு விழா

(புலோலி)
பருத்தித்துறை பொலிஸ்—பொதுமக்கள் நல்லுறவுச் செயற்குழுவினால் தமிழ், சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

யாழ். பொலிஸ் அத்தியட்சகர் திரு கிங்ஸ்லி விக்கிரமசூரியா தலைமையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறும். இவ்விளையாட்டு விழாவை காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. டி. ஈ. டபிள்யூ விஜயக்கோன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

ஆண்கள், பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டிகள் நெடுந்தூர ஓட்டப்போட்டி, குண்டெறிதல், 60 வயதிற்கு மேற்பட்டோருக்கான ஓட்டப்போட்டி, தலையணைச்சண்டை, விநோத உடைப்போட்டி, கயிறு இழுத்தல்போட்டி, பாடசாலை பாணவ, மாணவிகளுக்கான போட்டிகள், பாலர்களுக்கான போட்டிகள் உட்பட இன்னும்பல போட்டிகள் இடம் பெறவுள்ளன.

விளையாட்டுப் போட்டியை அடுத்து இரவு ஏழு மணிக்கு உலகப் புகழ் பெற்ற இலங்கை பொலிஸ் றிசேவ் படையினரின் 'பாண்ட்' வாத்திய இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (அ)

# பிரிவுபசார விழா

(உடுப்பிட்டி)
பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையிலிருந்து திருகோணமலை அரசினர் வைத்தியசாலைக்குப் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள டாக்டர். எஸ். கதிரவேற்பிள்ளைக்கு உடுப்பிட்டித் தொகுதி மக்கள் நடாத்தும் பிரிவுபசார விழா இம் மாதம் 12ம் திகதி கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பிரிவுபசார வைபவம் கரவெட்டி பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், யாழ். மல்லைக் கழக விரிவுரையாளருமான திரு. இ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெறும். (அ)

......

# புத்தாண்டு கலாச்சார விழா

(பண்டத்தரிப்பு)
ஆனைக்கோட்டை பொலிஸ் பகுதி பொலிசார்—பொதுமக்கள் நல்லுறவுச் சங்கத்தினர் எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு இம்மாதம் 19ம் திகதி சனிக்கிழமையன்று விளையாட்டு, கலாச்சார நிகழ்ச்சிகளை மானிப்பாய்இந்துக்கல்லூரியில் நடாத்துகின்றனர். இவ்விழாவில் பிரதம அதிதியாக வடபிராந்திய பொலிஸ்மா அதிபர் திரு. பி மகேந்திரன் கலந்து கொள்வார். ஆண்கள் சைக்கிளோட்டப் போட்டி, பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, கரப்பந்தாட்டப் போட்டி என்பனவும் நாடகங்கள் முதலான கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.
SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

## இடஒதுக்கீடு பேச்சுக்கள்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் சம்பந்தமான இடஒதுக்கீடு குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியமும், தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதியும் நேற்றுச்சந்தித்துப்பேச்சுக்கள் நடத்தினர். பேச்சுக்கள் இன்றும் நடைபெறும். நேற்றைய பேச்சுக்களில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

சகல திருத்த வேலைகளையும் எம்மிடம் ஒப்படையுங்கள்
● றேடியோக்கள்
● றேப் றெக்கோடர்கள்
● தொலைக்காட்சிப் பெட்டிகள்
● பிற மின் பொருட்கள்
அனைத்தையும் குறைந்த காலத்தில் சீரமைத்துக் கொடுப்போம்.
டில்கா றேடியோ அன்ரி. வி. றெக்னிசன்ஸ்
(பஸ்நிலையத்திற்கு முன்பாக மேல்மாடி)
202B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8174

# அராலி பாலவேலை ஜூலையில் பூர்த்தியாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் மிகநீளமான பாலம் எனக் கருதப்படும் 245 அடி நீளமும், 24 அடி அகலமும் கொண்ட அராலி பாலவேலைகள் ஜூலை மாத இறுதியில் முடிவடையுமென சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 16 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இப்பாலவேலைகள் 77ம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஆரம்பமானது.

இப்பால வேலையை பொறுப்பேற்ற அரசாங்க அபிவிருத்தி ஸ்ரமான கூட்டுத்தாபனத்தினர் துரிதமாக வேலைகளைச் செய்துவருகின்றனர்.

சுமார் 80 சதவிகிதமான வேலை பூர்த்தியடைந்துள்ளதாகவும், மிகுதி வேலை, இன்னும் 4மாதத்தில் பூர்த்தியாகுமென்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. (கு)

## விற்பனைக்கு

வெள்ளைநிற 6 மாத பெண் Pocket Dog (Pomnerian) விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: D. ரகுராஜ், "புவனகிரி", சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். 5438

## தேவை

தனியார் வைத்தியசாலை ஒன்றில் மருந்துக் கலவையாளராகப் பணிபுரிய பெண் ஒருவர் தேவை. க.பொ. த. (சாதாரண) சித்தியுடன், ஆங்கில அறிவும் உடையவராகவும், இணுவில், கோண்டாவில், தாவடி பகுதிக்குள் வசிப்பவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பிக்கவும்! விளம்பர இல: 5434, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5434

## பொலிஸ்-பொதுமக்கள் விளையாட்டு போட்டி

(வட்டுக்கோட்டை)

சங்கானை பொலிஸ் பிரதேச பொதுமக்கள்' பொலிசார் நல்லுறவுச்சங்கம் புதுவருடத்தை யொட்டிநடாத்தும் விளையாட்டுப் போட்டியும், கலாச்சார நிகழ்ச்சியும் இம்மாதம் 20ம் திகதி சங்கானை பொலிஸ் மைதானத்தில் நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம்.எச். பி. பெர்னாண்டோ மேற்கொண்டுள்ளார். [வெ]

## தமிழக விவசாய சங்க பிரமுகர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தமிழக விவசாயிகள் சங்கப் பிரமுகர் திரு. கோ. குமார் நேற்று, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து சிலமணிநேரம் கலந்துரையாடினார்.

தமிழ்நாட்டின், பெரும் விவசாயிகள் தொழிற்சங்கமாக விளங்கும் திரு. நாராயணசாமி நாயுடுவின் தலைமையிலுள்ள விவசாயிகள் சங்கத்தின் தென்னாற்காடு மாவட்ட விழுப்புரம் வட்டத்தலைவரான திரு. குமார்;-இலங்கையின்பல பகுதிகளிலும் நடைமுறையிலிருக்கும் விவசாய முறைகள் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொண்டதாகத் தெரிவித்தார்.

"இலங்கைக்கு வந்த நான் குறுகிய காலத்துக்குள்ளாகவே மலையகம், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்று இங்கு நடைமுறையிலிருக்கும் விவசாய முறைகள் பற்றி விரிவாகத் தெரிந்துகொண்டேன். யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் எனக்குமிகவும் உதவியாக இருந்தனர்" என்று திரு. குமார் நமது நிருபரிடம் தெரிவித்தார். (ம)

விலைக்கட்டுப்பாட்டை மீறினராம்!

# திடீர் வேட்டையில் 26கடைகள்சிக்கின

(யாழ்ப்பாணம்)

பொருட்களைக் கட்டுப்பாட்டு விலையிலும் கூடுதலான விலைக்கு விற்பனைசெய்ததாக 26 கடைகளை விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. எஸ். வேல்முருகு தலைமையில் சென்ற விலைக்கட்டுப்பாட்டுப்பரிசோதகர்களான திருவாளர்கள் எஸ் ஜேசுதாசன், எம். சிவபாதசுந்தரம், எம். கே. நவரத்தினம், ரி. சிதம்பரநாதன் ஆகியோர் கடந்த வெள்ளி. சனி' ஞாயிறுதினங்களில் வடமராட்சிப்பகுதியிலும், பளை பகுதியிலும் உள்ள கடைகளை முற்றுகையிட்டு திடீர்ச் சோதனையிட்டபோதே மேற்படி 26கடைகளிலும் பொருட்களை கட்டுப்பாட்டுவிலையிலும், நிர்ணயவிலையிலும் பார்க்க கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படிக் கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (கொ)

## கிறிஸ், கத்தி வைத்திருந்தால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

'கிறிஸ்' கத்தியை வைத்திருப்போர் எடுத்துச்செல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமைக் காரியாலயம் எச்சரித்துள்ளது.

'கிறிஸ்' கத்தி வைத்திருப்பது ஏற்கனவே சட்ட விரோதமாக இருந்த போதிலும் பொலிசார் இது குறித்து தீவிர கவனம் செலுத்துவது இல்லை.

இனிமேல் இது விஷயத்தில் தீவிர கவனம் செலுத்துமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம் பெற்ற கொலைகளில் 75 வீதம் கிறிஸ் கத்தியினாலேயே கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இதை அடுத்தே இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். (ய)

## விஜயசிறி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகத்தர்கள் தவறு இழைத்துள்ளனர் என்பதையும் ஆலோசனைக்குழுவினால் அவதானிக்க முடிந்துள்ளது இதுசம்பந்த மானவற்றை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் குழு கருதுகிறது'' என்று பிரதமர் நேற்று சபையில் தெரிவித்தார். (ம)

நவதானியத்தை விளைவித்து----------
நவஇலங்கையை உருவாக்குவோம்.....
✶ உங்கள் விளைவுப் பொருட்களான கிழங்கு, வெண்காயம், மிளகாய், பீற்றூட், பூசனிக்காய் அனைத்திற்கும் இன்றைய நிலவரத்திற்கேற்ப அதிக விலை கொடுத்து வாங்குபவர்கள்......
✶ உங்கள் உழைப்பிற்கு அதிக மதிப்புக் கொடுப்பவர்கள்.....
✶ உங்களிடம் வாங்கிய பொருட்களுக்கான பணத்தை நீங்கள் விரும்பிய வகையில், விரும்பிய இடத்தில், விரும்பிய நேரத்தில் கிடைக்க வசதி செய்து கொடுப்பவர்கள்............
✶ கொமிஷன் அடிப்படையில் நிதான வியாபாரம் செய்ய நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
பெட்டா டிரேட் கொம்பனி
90, 4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னரத்தினம் அல்பிறெட்

இவர் மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற S. M அல்பிறெடின் அன்பு மனைவியும், கிறிஸ்ரி, வில்லியம் ஜெயரத்தினம், டான் (Dan), சுன்னாகம் கிறீஸ்த சேவ ஆச்சிரம பிரதம சேவக வண. சாம் அல்பிறெட் (சாம் அண்ணன்) அவர்களின் அன்புத் தயாரும், திருவாளர்கள் H. S. இராசதுரை, W. S. அழகரத்தினம், காலஞ்சென்ற திருமதி நல்லம்மா தம்பையா, திருமதி செல்லம் அல்பிறெட், திரு. S. செல்வநாயகம், திருமதி பவளம் ஆனெல்ட் அவர்களின் அன்பு சகோதரியுமாவர்.

மரண ஆராதனை இன்று 9-4-80 புதன்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெற்று மானிப்பாய் மகேசன் வீதி இல்லத்திலிருந்து 4-30 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

உறவினரும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 5432

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. GE/8948/78 The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu' Phone: 489.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org